**கவனிக்க.**- 2009.11.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1628 - 2009 නොවැම්බර් 13 වැනි සිකුරාදා - 2009.11.13

1628 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1640 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1649 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசகரும மொழிகள் திணைக்களம்

மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர் பதவி

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர் பதவிக்கு இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. கல்வித் தகைமைகள்/மாற்றுத் தகைமைகள்.**- (அ) விண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிங்களத்தை அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது க. பொ. த. (உயர்தரம்) அல்லது அதற்கு நிகரான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) சர்வதேச மொழிகளில் தேர்ச்சியும் மொழி ஆய்வுகூட முகாமைத்துவத்தில் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) நிருவாக விடயங்களில் ஐந்து வருடங்களுக்கு மேலான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**3. வயதெல்லை.**- விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

**4. சம்பள அளவுத்திட்டம்.**- மாதாந்தம் ரூபா 17,680-10×320-11×365-15×450 - ரூபா 31,645 (எம் என் 6 - 2006 ஏ - அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 (iv)

**5. ஆட்சேர்ப்பு முறை.**- செயல்முறைப் பரீட்சையினதும் நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். செயல்முறைப் பரீட்சைக்கு 60% மான புள்ளிகளும் நேர்முகப் பரீட்சைக்கு 40% மான புள்ளிகளும் ஒதுக்கப்படும்.

(1) செயல்முறைப் பரீட்சையின் இயல்பும் புள்ளிகள் வழங்கப்படும் முறையும் வருமாறு :

(i) மொழி ஆய்வுகூடத்தில் ''கொன்சோலை'' (Console) இயக்குதல்
புள்ளிகள் 15

(ii) மொழி ஆய்வுகூடத்தின் ஒலிப்பதிவு உபகரணத்தை இயக்குதல். உற்பத்திக்கூறின் சாதாரண ஒலிப்பதிவுக் கருவியை இயக்குதல்.
புள்ளிகள் 15

(iii) பாடங்களை ஒலிப்பதிவு செய்தலும் அவற்றை திருத்தி அமைத்தலும் மீளத் திருத்தியமைத்தலும்
புள்ளிகள் 15

(iv) பல்வேறு கற்கை நெறிகள் தொடர்பான பாடங்களைத் தயாரித்தல்
புள்ளிகள் 15

60

(2) நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை

(i) மேலதிக கல்வித் தகைமைகளுக்கு
புள்ளிகள் 10

| | |
|---|---|
| (அ) பட்டப்பின் பட்டம் | 10 |
| (ஆ) பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 05 |
| (இ) டிப்புளோமா | 03 |

(ii) அந்நிய மொழிகளில் தகைமை பொருட்டு
புள்ளிகள் 10
(ஒவ்வொரு அந்நிய மொழி பொருட்டு 05 புள்ளிகள்)

(iii) சம்பந்தப்பட்ட துறையிலுள்ள அனுபவம்
புள்ளிகள் 10

(அனுபவம் பொருட்டு கவனத்திற் கொள்ளப்படும் வருடங்களுக்குப் பின்னரான ஒவ்வொரு வருடத்திற்கும் 2 புள்ளிகள் வீதம்)

(iv) நிருவாக வேலையில் அனுபவம்
புள்ளிகள் 10
(5 வருடங்களுக்குப் பின்னரான ஒவ்வொரு வருடத்திற்கும் 2 புள்ளிகள் வீதம்

40

**6. பதவியிலமர்த்தும் நியதிகள்.**- (i) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) நியமனம் பெறுபவர் 3 வருட காலத்துக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்படுவர். அவர் ஏலவே அரச/மாகாண அரச சேவையின் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை நிலையில் வைக்கப்படுவர்.

(iii) நியமனம் பெறுபவர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழியான தமிழ்/சிங்களத்தில் திறமைச் சித்தி ஆகிலும் பெறல் வேண்டும்.

(iv) 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்படும் சகல அலுவலர்களும் அவர்கள் அரசாங்க சேவைக்கு சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியில் சேவைக்குச் சேர்ந்த திகதியிலிருந்து 5 வருட காலத்துக்குள் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(v) தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையான பிரிவுகள் ஏற்புடையன.

7. மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், ''அரச கரும மொழிகள் ஆணையாளர், அரசகரும மொழிகள் திணைக்களம், "பாஷா மந்திரய", 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய,

என்ற முகவரியை 2009.12.11 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

8. "மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர் பதவி" என்ற சொற்கள் விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பங்கள் எல்லா அம்சங்களிலும் பூரணமானதாய் இருத்தல் வேண்டும். தாமதித்து வரும் விண்ணப்பங்களும் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பமும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் அஞ்சலில் தொலைந்துவிட்டன போன்ற முறைப்பாடுகள் வரவேற்கப் படமாட்டா.

10. அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் தங்களது விண்ணப்பங்களை தத்தமது திணைக் களத்தின்/தாபனங்களின் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும்.

11. விண்ணப்பகாரரது விண்ணப்பத்தில் இடம்பெறும் ஏதாவது பொய்யான கூற்று தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து, அது அவரைத் தகைமை நீக்கத்துக்கு உட்படுத்தும். அது தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு அவரை உட்படுத்தும்.

அரசகரும மொழிகள் ஆணையாளர்.

அரசகரும மொழிகள் திணைக்களம்,
இராஜகிரிய.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அரசகரும மொழிகள் திணைக்களம்
மொழி ஆய்வுகூடக் கண்காணிப்பாளர் பதவி

இல. ....................................
(அலுவலக உபயோகத்திறகு மட்டும்)

1. முழுப் பெயர் :-
(தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :-
(தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. தனிப்பட்ட முகவரி :-
(தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

4. அலுவலக முகவரி :-
(தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

5. தொலைபேசி இலக்கம் :-
அலுவலகம் :----.
தனிப்பட்ட :----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. பிறந்த திகதி :----.

8. 2009.12.11 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

9. பால் (ஆணா/பெண்ணா என்பது) :----.

10. பிரசாவுரிமை :----.

11. கல்வி கற்ற மொழி மூலம் :-----.

12. கல்வித் தகைமைகள் :-

(i) பட்டம் :

| பல்கலைக்கழகம் | பட்டத்தின் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| | | |

(ii) க. பொ. த. (உ/த) :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |

(iii) சர்வதேச மொழிகளில் தேர்ச்சி:

| பரீட்சை | மொழி | தரம் |
|---|---|---|
| | | |

(iv) மொழி ஆய்வுகூட முகாமைத்துவத்தில் உள்ள அனுபவம் :----.

(v) நிருவாக விடயங்களில் அனுபவம் (உரிய காலப்பகுதியுடன்) :----.

13. வேறு தகைமைகள் :-----.

இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மை யானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டிருக்கும் விபரங்களில் எவையேனும் நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் பொய்யானவையாக அல்லது சரியற்றவையாகக் கண்டுபிடிக்கப் படும் சந்தர்ப்பத்தில் நான் தகைமை நீக்கத்துக்கு உட்படுவேன் என்பதையும் அத்தகைய பொய்மை அல்லது சரியின்மை நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரிய வந்தால் நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்தால் திணைக்களத் தலைவரது பரிந்துரை**

பரிந்துரை (விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவரை விடுவிக்க முடியுமா/இல்லையா என்று குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.)

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

திகதி :-----.

11-254

## நீதிச்சேவை ஆணைக்குழு

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள பதிவாளர் பதவி

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள பதிவாளர் பதவியின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- (மாதாந்தம்) ரூபா 33,555 - 3 × 790 - 17 × 1,050 - ரூபா 55,555.

3. **தகைமைகள்**.- (அ) இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிப் பதிவாளர் பதவியில் இருத்தல் ; அல்லது

(ஆ) (i) 4 வருடங்களுக்குக் குறையாமல் சட்டத்தொழிலில் தீவிரமாக ஈடுபட்ட சட்டத்தரணியாக இருத்தல் ; அத்துடன்

(ii) விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருப்பின் தகுதியுடையவராவார்.

**குறிப்பு**.- சட்டத்தரணியாக பதவி நிலைத் தரத்தின் பதவி ஒன்றில் அல்லது ஏதேனும் அமைச்சு, அரசாங்கத் திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் சட்டம் தொடர்பான ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது சட்டக்கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராக அல்லது தொழில் நியாயசபை அல்லது கிராமோதய சபையின் தலைவராக சேவையாற்றிய காலப்பகுதி அத்தொழிலில் தீவிரமாக ஈடுபட்ட காலப்பகுதியாகக் கருதப்படும்.

4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும்-
(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த ஒழுக்கப்பண்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. வேண்டப்படும் பொழுது விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அதி உயர் கல்வித்தகைமைச் சான்றிதழ் ;
(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ் ;
(ஈ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியடைந்த அதி உயர் பரீட்சைச் சான்றிதழ்.

6. இந்தப் பதவியின் பொருட்டு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரித்து, “செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு, கொழும்பு 12” என்ற முகவரிக்கு 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

7. அரசாங்கம்/அரச கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படும். விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் இது பற்றி அறியத்தராவிடின் விண்ணப்பதாரர் இது தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

எம். பி. த சில்வா,
பதில் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு,
கொழும்பு 12,
2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள பதிவாளர் பதவி

1. (1) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(2) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

2. (1) நிரந்தர முகவரி :----.
(2) அலுவலக முகவரி :----.

3. இனம் :----.

4. (1) பிறந்த திகதி :----.
(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதியன்று வயது : ----.
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. (1) பால் :----.
(2) திருமணமானவரா/திருமணமாகாதவரா/விதவை :----.
(3) பிள்ளைகளின் எண்ணிக்கை :----.
(4) அவர்கள் மகன்மாரா? மகள்மாரா? :----.
மற்றும் அவர்களுடைய வயது :----.

6. முன்வைக்கப்படும் கல்விசார், தொழில்சார் தகைமைகள் :----.

7. சித்தியடைந்த அதி உயர் பரீட்சை :-
(1) சிங்களத்தில் :----.
(2) தமிழில் :----.
(3) ஆங்கிலத்தில் :----.

8. விண்ணப்பதாரர் இலங்கை நீதிச்சேவை பிரதிப் பதிவாளராயின்
(1) அப்பதவியின் முதல் நியமனத் திகதி :----.
(2) பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
(3) இந்தப்பதவியின் நியமனத்திற்கு முன்னர் வகித்த பதவி :----.
(4) விண்ணப்பதாரர் அரசாங்க/கூட்டுத்தாபனத்தில் சேவை செய்பவராயின் முதல் நியமனப் பதவி மற்றும் முதல் நியமனத் திகதி :----.
(5) தற்போதைய வருடாந்த சம்பளம் :----.
சட்டத்தரணியாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களினால் மாத்திரம் 09 தொடக்கம் 17 வரையிலான விபரங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

9. (1) சட்டத்தொழிலுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி :----.
(2) விண்ணப்பதாரர் தீவிரமாக இத்தொழிலில் ஈடுபட்ட காலப்பகுதி, திகதிகள் சுட்டிக்காட்டப்படல் வேண்டும் :----.
(3) கடந்த வருடத்தின் பொழுது இத்தொழிலால் ஈட்டப்பட்ட பொதுவான வருமானம் :----.

(4) நீங்கள் அடிக்கடி சமுகமளிக்கும் நீதிமன்றங்கள் :----.
(5) நீங்கள் அடிக்கடி சமுகமளிக்கும் நீதிமன்றங்களின் மூன்று நீதிபதிகளின் பெயர்கள் :----.
(6) நீங்கள் தீவிரமாக இத்தொழிலில் ஈடுபட்டிருக்காவிடில், சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈடுபட்ட தொழில்கள், வகித்த பதவிகள், திகதிகள் மற்றும் வருடாந்த சம்பளம் :----.

10. தனிப்பட்ட வருமானம் ஏதுமிருப்பின்
(1) வருமான மூலம் :----.
(2) வருடாந்த வருமானம் :----.

11. கடந்த 10 ஆண்டு காலப்பகுதியின் பொழுது அரசியலில் ஈடுபட்டிருந்தீர்களா? :----.

12. இதற்கு முன்னர் இந்தப்பதவிக்கு விண்ணப்பித்தீர்களா? (அவ்வாறாயின் ஆண்டினைக் குறிப்பிடவும்) :----.

13. நீங்கள் வருமானவரி செலுத்துபவரா? :----.

14. இரண்டு தொடர்பு கொள்ளக்கூடியவர்களின் பெயர்கள் கீழே தரப்படல் வேண்டும். உங்களை அறிந்த அத்தகையவர்கள் பொறுப்புவாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் :-

(1) (i) பெயர் :----.
(ii) பதவி :----.
(iii) முகவரி :----.

(2) (i) பெயர் :----.
(ii) பதவி :----.
(iii) முகவரி :----.

15. தற்பொழுது உங்களுக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணை அல்லது குற்றச்சாட்டு உள்ளதா? முன்பு அத்தகைய விசாரணை அல்லது குற்றச்சாட்டு இருந்ததா? அத்தகைய குற்றச்சாட்டின் தன்மையைக் குறிப்பிடுக :----.

16. பதவி விலகல் காரணம் தவிர உங்களின் பதவி வெறிதாக்கப்பட்டதா? :----.

17. உங்களின் திறமைச் சான்றிதழ்கள் இருப்பின் அதனைச் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் ஏதாவது விபரங்கள் பிழையானது அல்லது தவறானது என தெரிவின் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவன் என பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் .............. எனும் பதவியில் இந்த நீதிமன்றம் திணைக்களம் அமைச்சு கூட்டுத்தாபனத்தில் பணி புரிகின்றார் என்று சான்றுபடுத்துகிறேன். அவரால் குறித்துரைக்கப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் திரு. /திருமதி/செல்வி .................................. இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :-----.
அலவலக முத்திரை :-----.
திகதி :-----.

11-312/1

---

**நீதிச்சேவை ஆணைக்குழு**

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள பிரதிப் பதிவாளர் பதவி

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள பிரதிப் பதிவாளர் பதவியின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

2. சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) ரூபா 33,355 - 3 × 790 - 17 × 1,050 - ரூபா 55,555.

3. **தகைமைகள்**.- (அ) 4 வருடங்கள் தொடர்ச்சியான இலங்கை நீதிச்சேவையின் பதிவாளர் சேவையில் தரம் 1 அல்லது தரம் 11 பதிவாளராக இருத்தல் ; அல்லது

(ஆ) (i) 1 வருடத்துக்குக் குறையாமல் சட்டத்தொழிலில் தீவிரமாக ஈடுபட்ட சட்டத்தரணியாக இருத்தல், அத்துடன்

(ii) விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருப்பின் தகுதியுடையவராவார்.

**குறிப்பு**.- சட்டத்தரணியாக பதவி நிலைத் தரத்தின் பதவி ஒன்றில் அல்லது ஏதேனும் அமைச்சு, அரசாங்கத் திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் சட்டம் தொடர்பான ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது சட்டக்கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராக அல்லது தொழில் நியாய சபை அல்லது கிராமோதய சபையின் தலைவராக சேவையாற்றிய காலப்பகுதி அத்தொழிலில் 'தீவிரமாக ஈடுபட்ட' காலப்பகுதியாகக் கருதப்படும்.

4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும்-
(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த ஒழுக்கப்பண்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. வேண்டப்படும் பொழுது விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அதி உயர் கல்வித்தகைமைச் சான்றிதழ் ;
(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியடைந்த அதி உயர் பரீட்சைச் சான்றிதழ்.

6. இந்தப் பதவியின் பொருட்டு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரித்து செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு, கொழும்பு 12 என்ற முகவரிக்கு 2009, ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

7. அரசாங்கம்/அரச கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படும். விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் இது பற்றி அறியத்தராவிடின் நீதிச்சேவை செயலாளருக்கு இது தொடர்பாக அறிவித்தல் வேண்டும்.

எம். பி. த சில்வா,
பதில் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச் சேவை ஆணைக்குழு,
கொழும்பு 12,
2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் 28 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவை ஆணைக்குழு**

**இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள பதிவாளர் பதவி**

1. (1) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(2) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

2. (1) நிரந்தர முகவரி :----.
(2) அலுவலக முகவரி :----.

3. இனம் :----.

4. (1) பிறந்த திகதி :----.
(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதியன்று வயது : ----.
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. (1) பால் :----.
(2) திருமணமானவரா/திருமணமாகாதவரா/விதவை :----.
(3) பிள்ளைகளின் எண்ணிக்கை :----.
(4) அவர்கள் மகன்மாரா? மகள்மாரா? :----.
மற்றும் அவர்களுடைய வயது :----.

6. முன்வைக்கப்படும் கல்விசார் /தொழில்சார் தகைமைகள் :----.

7. சித்தியடைந்த அதி உயர் பரீட்சை :-
(1) சிங்களத்தில் :----.
(2) தமிழில் :----.
(3) ஆங்கிலத்தில் :----.

8. விண்ணப்பதாரர் இலங்கை நீதிச்சேவையில் தரம் I அல்லது தரம் II பிரதி பதிவாளராயின் -
(1) அப்பதவியின் முதல் நியமனத் திகதி :----.
(2) பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
(3) இந்தப்பதவியின் நியமனத்திற்கு முன்னர் வகித்த பதவி :----.
(4) விண்ணப்பதாரர் அரசாங்க கூட்டுத்தாபனத்தில் சேவை செய்பவராயின் முதல் நியமனப் பதவி மற்றும் முதல் நியமனத் திகதி :----.
(5) தற்போதைய வருடாந்த சம்பளம் :----.

சட்டத்தரணியாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தாரர்களினால் மாத்திரம் 09 தொடக்கம் 17 வரையிலான விபரங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

9. (1) சட்டத்தொழிலுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி :----.
(2) விண்ணப்பதாரர் தீவிரமாக இத்தொழில் ஈடுபட்ட காலப்பகுதி. திகதிகள் சுட்டிக்காட்டப்படல் வேண்டும் :----.
(3) கடந்த வருடத்தின் பொழுது இத்தொழிலால் ஈட்டப்பட்ட பொதுவான வருமானம் :----.
(4) நீங்கள் அடிக்கடி சமுகமளிக்கும் நீதிமன்றங்கள் :----.
(5) நீங்கள் அடிக்கடி சமுகமளிக்கும் நீதிமன்றங்களின் மூன்று நீதிபதிகளின் பெயர்கள் :----.
----.
----.
(6) நீங்கள் தீவிரமாக இத்தொழிலில் ஈடுபட்டிருக்காவிடில், சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈடுபட்ட தொழில்கள், வகித்த பதவிகள், திகதிகள் மற்றும் வருடாந்த சம்பளம் :----.

10. தனிப்பட்ட வருமானம் ஏதுமிருப்பின்
(1) வருமான மூலம் :----.
(2) வருடாந்த வருமானம் :----.

11. கடந்த 10 ஆண்டு காலப்பகுதியின் பொழுது அரசியலில் ஈடுபட்டிருந்தீர்களா? :----.

12. இதற்கு முன்னர் இந்தப்பதவிக்கு விண்ணப்பித்தீர்களா? (அவ்வாறாயின் ஆண்டினைக் குறிப்பிடவும்) :----.

13. நீங்கள் வருமானவரி செலுத்துபவரா? :----.

14. இரண்டு தொடர்பு கொள்ளக்கூடியவர்களின் பெயர்கள் கீழே தரப்படல் வேண்டும். அத்தகையவர்கள் உங்களை அறிந்த பொறுப்புவாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் :-

(1) (i) பெயர் :----.
(ii) பதவி :----.
(iii) முகவரி :----.

(2) (i) பெயர் :----.
(ii) பதவி :----.
(iii) முகவரி :----.

15. தற்பொழுது உங்களுக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணை அல்லது குற்றச்சாட்டு உள்ளதா? முன்பு அத்தகைய விசாரணை அல்லது குற்றச்சாட்டு இருந்ததா? அத்தகைய குற்றச்சாட்டின் தன்மையைக் குறிப்பிடுக :----.

16. பதவி விலகல் காரணம் தவிர உங்களின் பதவி வெறிதாக்கப்பட்டதா? :-----.

17. உங்களின் திறமைச் சான்றிதழ்கள் இருப்பின் அதனைச் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் ஏதாவது விபரங்கள் பிழையானது அல்லது தவறானது என தெரிவின் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவன் என பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ................................ என்பவர் .............. எனும் பதவியில் இந்த நீதிமன்றம்/திணைக்களம்/அமைச்சு/கூட்டுத்தாபனத்தில் பணி புரிகின்றார் என்று சான்றுபடுத்துகிறேன். அவரால் குறித்துரைக்கப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் திரு. /திருமதி/செல்வி ................................... இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :-----.
அலவலக முத்திரை :-----.
திகதி :-----.

11-312/2

---

## தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம்

### பகுதி நேர விரிவுரையாளர்கள்/போதனாசிரியர்களைப் பதிவுசெய்தல் - கழக ஆண்டு - 2010

1. இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக்கல்லூரிகளிலும், தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் கீழ்வரும் அறிவுறுத்தல்களுக் கிணங்க விரிவுரைகள்/போதனைகள் நடத்துவதற்கு தகுதியும் அனுபவமுமிக்கவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்குத் தேவையான விண்ணப்பங்கள், பாடவிபரங்கள் என்பவற்றை அவரவர் கடமையாற்ற விரும்பும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் அதிபர்/பணிப்பாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதனைப் பெற்றுக்கொள்வதற்கு முகவரியுடன் முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவு நீளம் கொண்ட கடித உறையினை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பகுதி நேர விரிவுரையாளர்/போதனாசிரியர் எனக் குறிப்பிடவும். மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி களிலும், தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

3. பாட விபரங்கள் விண்ணப்ப படிவங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 11.12.2009 ஆகும்.

4. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (i) விண்ணப்பதாரிகள் தமது கல்வித்தகைமை, தொழிற்தகைமை, அனுபவம் போன்ற சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பிவைக்க வேண்டும்.

(ii) *கொடுப்பனவு வழங்கல்.*- விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமை, தொழிற்தகைமை, அனுபவம் என்பவற்றுடன் பயிற்சி நெறிகளின் தரம் என்பவற்றிற்கமைய ஒரு மணித்தியாலயத்திற்கு 200 முதல் 400 ரூபா வரை வேறுபடும்.

(iii) *விண்ணப்பங்கள் அனுப்பும் முறை.*- அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் பகுதி நேர விரிவுரையாளர்கள்/போதனாசிரியர்கள் தங்களது வழமையான கடமைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை திணைக்களத் தலைவர் ஊடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(iv) *தெரிவு.*- தொழில்நுட்பக்கல்லூரி, தொழில்நுட்பவியல் கல்லூரி அதிபரினால்/பணிப்பாளரினால் நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு விண்ணப்பதாரிகளின் தகைமை, கற்பித்தல் அனுபவம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்டவர்கள் குறித்த கல்லூரிகளின் அவசியத்தை கருத்திற் கொண்டு முன்னறிவித்தல் எதுவுமின்றி கல்லூரி அதிபர்/பணிப்பாளர்களினால் நிறுத்த முடியும்.

(v) மேலதிக கொடுப்பனவுகள் எதுவுமின்றி தமது பாடத்திற்கான உள்ளகப் பரீட்சைகளை இப்பகுதி நேர விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் நடாத்துதல் வேண்டும்.

5. இப்பதவி 2010 ஆம் வருட கல்வி ஆண்டிற்கு மட்டுமே உரியதாகும். தேவையேற்படின் இதற்கு முன்னதாகவேனும் முடிவுக்கு கொண்டு வரலாம்.

6. ஒரு பாடத்திற்கு மேல் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் தொழில் நுட்பக் கல்லூரி, தொழில்நுட்பவியல் கல்லூரி அதிபர்/பணிப்பாளர் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கலாநிதி எச். எல். ஒபயசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

**தொழில்நுட்ப/தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்**

| தொ. இல. | தொழில்நுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் பெயர் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 | கொழும்பு |
| 2 | காலி தொழில்நுட்பவியல் கல்லூரி | களுவெல, காலி | காலி |
| 3 | கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 4 | யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி | பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 5 | பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரி | கிறின்லண்ட்டிரைவ், பதுளை | பதுளை |
| 6 | கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை | கேகாலை |
| 7 | அனுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி | புதிய நகரம், அனுராதபுரம் | அனுராதபுரம் |
| 8 | குருநாகல் தொழில்நுட்பவியல் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல் | குருநாகல் |
| 9 | இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி | காலி வீதி, இரத்மலான | கொழும்பு |
| 10 | அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி | இங்கினியாகலவீதி, அம்பாறை | அம்பாறை |
| 11 | மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை | மாத்தறை |
| 12 | சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பாறை வீதி, சம்மாந்துறை | அம்பாறை |
| 13 | களுத்துறை தொழில்நுட்பக் கல்லூரி | களமுல்ல, களுத்துறை | களுத்துறை |
| 14 | இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரி | பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 15 | வறக்காப்பொலை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பகல வீதி, வறக்காப்பொல | வரக்காபொல |
| 16 | குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி | பன்னலவீதி, குளியாப்பிட்டிய | குருநாகல் |
| 17 | பாத்ததும்பறை தொழில்நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கடுகஸ்தொட்ட | கண்டி |
| 18 | நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா | நுவரெலியா |
| 19 | ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம | கொழும்பு |
| 20 | பெலியத்தை தொழில்நுட்பக் கல்லூரி | புவக்தண்டாவ, பெலியத்த | ஹம்பாந்தோட்டை |
| 21 | ஹசலக தொழில்நுட்பக் கல்லூரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |
| 22 | தம்புள்ள தொழில்நுட்பக் கல்லூரி | மாத்தளை வீதி, தம்புள்ள | மாத்தளை |
| 23 | பலப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி | வந்ததுவ புகையிரத நிலைய வீதி, பலப்பிட்டிய | காலி |
| 24 | வாரியப்பொல தொழில்நுட்பக் கல்லூரி | சிலாபம் வீதி, வாரியப்பொலை | குருநாகல் |
| 25 | மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 26 | பண்டாரவளை தொழில்நுட்பக் கல்லூரி | வேவதென்ன, பண்டாரவளை | பதுளை |
| 27 | மொனரகலை தொழில்நுட்பக் கல்லூரி | சிறிகல, மொனராகல | மொனராகலை |
| 28 | கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி | வெரலவத்தை, யக்கல | கம்பஹா |
| 29 | திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி | மிஹிந்தபுரம், திருகோணமலை | திருகோணமலை |
| 30 | தெஹியத்தகண்டிய தொழில்நுட்பக் கல்லூரி | மஹாவானவெல, தெஹியத்தகண்டிய | அம்பாறை |
| 31 | மாத்தளை தொழில்நுட்பக் கல்லூரி | எம். சீ. வீதி, மாத்தளை | மாத்தளை |
| 32 | வீரவில தொழில்நுட்பக் கல்லூரி | புதிய நகரம், வீரவில | ஹம்பாந்தோட்டை |
| 33 | மெதகம தொழில்நுட்பக் கல்லூரி | மெதகம (விபில ஊடாக) | மொனராகலை |
| 34 | பொலன்னறுவை தொழில்நுட்பக் கல்லூரி | வித்தியாபுரம், பொலன்னறுவை | பொலன்னறுவை |
| 35 | எம்பிலிப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய | இரத்தினபுரி |
| 36 | வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி | மன்னார் வீதி, வவுனியா | வவுனியா |
| 37 | அக்கறைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி | அக்கறைப்பற்று | அம்பாறை |
| 38 | ஆணமடுவ தொழில்நுட்பக் கல்லூரி | கம்முதாபூமி, தம்மண்ணகம, ஆனமடுவ | புத்தளம் |

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

*மின்நுட்பவியலாளர் பதவி*

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள மின்நுட்ப வியலாளர் (Electrician) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு, பின்வரும் தகைமைகளையுடைய ஆண் விண்ணப்ப தாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி 2009.12.15 ஆகும்.

2. **தகைமை**.- சகல விண்ணப்பதாரர்களும்.-

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.2 சிறந்த நல்லொழுக்கமும், தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 2009.12.15 ஆந் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும், 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** :

3.1 கல்வித்தகைமைகள்.- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் அல்லது உயர் பரீட்சையொன்றில் சித்தியடைந் திருத்தல்.

**குறிப்பு**.- அரசாங்கத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் மின்நுட்பவியலாளராக 10 வருட சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) தொடர்பில் தரம் 8 சித்தியடைந்தவர்களும் கவனத்திற் கொள்ளப்படும்.

3.2 தொழில்சார் அறிவும் தகைமைகளும்.-

3.2.1 மின் உபகரணங்களைப் பொருத்துதல், பழுதுபார்த்தல், மின் உபகரணங்களில் கோளாறுகளை இனங்காணல் போன்றவை தொடர்பில் காணப்படும் அறிவும், திறமையும்.

3.2.2 மின்கம்பிகளை இணைத்தல், விஸ்தரித்தல், திட்டமிடல் என்பவற்றில் தெளிவைக் கொண்டிருத்தல்.

3.2.3 அனைத்து பாதுகாப்பு அறிவுறுத்தல்களையும் கடைப்பிடிக்கு மாறு கட்டிடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் பொருத்தி களை இணைத்தல், பழுதுபார்த்தல் என்பவற்றில் போதிய அறிவைப் பெற்றிருத்தல்.

3.2.4 மோட்டார் வாகன மின்னியல் பழுதுபார்ப்புகள் தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல்.

3.2.5 மின்மானிகள் மற்றும் அவற்றின் இயக்கம் என்பன தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிருத்தல்.

3.2.6 அரசாங்கத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் மின்நுட்பவியலாளராக 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்).

**குறிப்பு**.- அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் இரண்டு வருட முழு நேர மின்னியலாளர் தொடர்பான தேசிய சான்றிதழைப் பெற்றுள்ள அல்லது மின்னியலாளர் தொடர்பான தேசிய தொழில்சார் பரீட்சையில் பகுதி III இல் அல்லது பகுதி II இல் சித்தியடைந்துள்ள அல்லது இவற்றிற்குச் சமமானதென தாபனப் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றிதழொன்றைப் பெற்றுள்ள அல்லது உயர் தொழில்சார் தகைமையைக் கொண்டவர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

4. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்குரிய வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : ரூ. 12,470 - 130 × 10 - 145 × 10 - 160 × 10 - 170 × 12 - ரூ. 18,860. ரூ. 12,860 சம்பள நிலைக்கு வருவதற்கு முன்பதாக வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- அரசாங்க வர்த்தமானியிலும், பத்திரிகை அறிவித்தல் மூலமும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள். 24/95 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை யொன்றிற்கும், செயன்முறைப் பரீட்சையொன்றிற்கும் உட்படுத்தப்பட்டு ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுவோர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார்.

6. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய 8.27" × 11.69" அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு 2009.12.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள், தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பரீட்சைத் திணைக்களத்தின் மின்நுட்பவியலாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்களும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். தபாலில் வைத்து காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் இத்திணைக்களம் பொறுப்புக் கூறாது என்பதுடன், தபாலில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில், நேர காலத்துடன் தமது விண்ணப்பங்களை தபாலில் சேர்க்குமாறும் விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

9. இவ்வர்த்தமானி அறிவித்தலின் பகுதி I (II அ) தொகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவை நியமனங்களுடன் தொடர்புடைய பொது நிபந்தனைகள் மீது விண்ணப்பதாரிகளின்

கவனம் கோரப்படுகின்றது. இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உரியது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2009, நவெம்பர்

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

மின்நுட்பவியலாளர் பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.

2. முதலெழுத்துக்குரிய பெயர்கள் :----.

3. சொந்த முகவரி :-

4. அலுவலக முகவரி (தொழில் செய்பவராயின்) :----.

5. வசிக்கும் மாவட்டம் :----.

6. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
(ii) 2009.12.15 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
(iii) தேசிய அடையாள அட்டை இல. :----.

7. இனம் (சிங்களம்/தமிழ்/முஸ்லிம் என்றவாறு குறிப்பிடவும்) :----.

8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :-----.

9. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த) :----.
பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

க. பொ. த. (உ/த) :----.
பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

10. தொழில்சார் தகைமைகள் :-----.
11. தொழில்சார் அனுபவம் :-----.
12. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :-----.
(அ) பதவி (வகுப்பு/தரம்) :-----.
(ஆ) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியும், நிறுவனமும் :-----.
(இ) ஓய்வூதிய உரித்துடையதா? இல்லையா? என்பது :-----.
(ஈ) தற்போது செலுத்தப்படுகின்ற வருடாந்த சம்பள அளவுத் திட்டமும், தற்போதைய சம்பள நிலையும் :-----.

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதியுரைக்கின்றேன். அத்துடன், நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது பதவியை விட்டு விலகிச் சென்றவராக கருதப்பட்ட ஒருவரல்ல என்பதையும் தொடர்ந்தும் உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களுள் ஏதும் பிழையானதென அல்லது பொய்யானதென, இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனத்திற்குப் பின்னர் தெரிய வந்தால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**(அரசாங்க உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை**

திரு. ...................... என்பவருடைய விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன். இவர் இத்திணைக்களத்தின் / நிறுவனத்தின் நிரந்தர/தற்காலிக/அமய ஊழியராக பணியாற்றுகின்றார் என்பதையும், இவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
இறப்பர் முத்திரையும்.

திகதி :-----.
பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

11-384

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக் கொள்ளல் - 2009 ஆம் ஆண்டு

இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2009 ஆம் வருடத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்காக இங்கு 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தராதரங்களை கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.-

2. **குறைந்த தராதரம்**-

(அ) 2009.05.31 ஆந் திகதியன்று வயது வருடம் 16 - 25 க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தராதரம்.- க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தலுடன் முதல் தடவையில் குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அக்கல்வித் தராதரத்தை 2008.12.31 க்கு முன்பு பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும்.

3. **பயிற்சி நெறி**.- பயிலுனர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்கு கீழ் காணப்படும் தொழில் பயிற்சியை அத்தொழிலுக்கு ஏற்ற காலவெல்லைக்குள் கற்பதற்கு இடமளிக்கப்படும் பயிற்சி நெறி சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

| | |
|---|---|
| (1) டீசல் என்ஜின் இயந்திர நுட்பவியலாளர் | - வருடம் 2 1/2 |
| (2) ஒட்டும் நுட்பவியலாளர் | - வருடம் 3 |
| (3) மின்நுட்பவியலாளர் (சக்தி) | - வருடம் 3 1/2 |
| (4) இயந்திரவியலாளர் (பொது) | - வருடம் 3 1/2 |

**விண்ணப்பம்**.- விண்ணப்பதாரியினால் இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தட்டச்சு கடதாசியில் (A4) கடதாசியில் தயாரித்து முழு விபரமும் சரியான முறையில் குறிப்பிடல் வேண்டும். தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்**.- (1) பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுத்தல் எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவையான குறைந்த தராதரங்களை உடையதும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூல பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(2) எழுத்துமூல பரீட்சை கணிதம் மற்றும் அடிப்படை தொழில்நுட்ப அறிவும் பொது அறிவையும் அடிப்படையாக கொண்டு நடாத்தப்படும். எழுத்து மூல பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறியின் தன்மைக்கு ஏற்ப தொழில் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(3) எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனையில் கூடிய முழுப் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி மூலம்**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்காக மீண்டும் வழங்கப்படாத ரூபா 250 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை தபாற் காரியாலத்தில் மாற்றிக் கொள்ளக்கூடியவாறு புகையிரத முகாமையாளர் எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை மூலம் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்ப பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற் காகவோ பரீட்சைக் கட்டணம் மீண்டும் வழங்கப்படமாட்டாது.

8. **பரீட்சை நிலையம்**.- சகல தராதரங்களையும் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்காக கொழும்பில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்**.- நிறுவனத்தின் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கு ஏற்ற காலவெல்லைக்குள் பயிற்சியை திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. பயிற்சியை பெறும் காலவெல்லைக்குள் பயிலுனர்களுக்காக தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

11. பயிற்சியின் பின்பு திணைக்களம் தொழில் வழங்காது.

12. கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவம் தயாரித்து பணிப்பாளர், இலங்கை புகையிரத ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணப்பத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "இலஜேபுதொபநி 2009" என குறிப்பிடல் வேண்டும்.

13. **விண்ணப்ப பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி**.- விண்ணப்பப்பத்திரம் 2009.12.31 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்ப பத்திரம் நிராகரிக்கப்படும்.

பி. பி. விஜேசேகர,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10.
2009, ஒற்றோபர் 23 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2009 ஆம் ஆண்டு

1. முழுப்பெயர் : (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி : (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :-----.

5. பால் (ஆண்/பெண்) தன்மை :-----.

6. கல்வித் தராதரம் (க.பொ.த. - சாதாரண தரம்)

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

இரண்டாம் தடவை

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

7. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :----.

8. விண்ணப்ப அறிவித்தலின்படி தேர்ந்தெடுத்துள்ள தொழில் பயிற்சி :-

(1) .................

(2) .................

9. ................ தபால் அலுவலகத்தில் ரூபா 250 ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம்...................... ஐ உடைய காசுக்கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன்.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிமொழிகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பொய்யானதென நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

...............................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11- 277